முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (11.3.2025) சென்னையில் நடைபெற்ற ஜெ. முருகேசன் – எம். சுமிதா தம்பதியரின் மகன் எம்.சந்தீப் குமார் மற்றும் கே.பி. வாசுதேவன் டாக்டர் கே. காயத்ரி தேவி தம்பதியரின் மகள் வி. சந்தோஷி ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். உடன் நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப. ரங்கநாதன், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் சிவாஜி, வேலம்மாள் கல்வி குழுமத்தின் நிர்வாகிகள் எம்.வி.முத்துராமலிங்கம், எம்.வி.எம். வேல்முருகன் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (11.3.2025) சென்னையில் நடைபெற்ற செய்தி மக்கள் தொடர்புத் துறை கூடுதல் இயக்குநர் மு.பா. அன்புச்சோழன் அவர்களின் மகள் அ. காவியா – ச.பிரவின் ராகுல் ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். உடன் சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

“இதயம் இணையும் இல்லறம்! உதயம் வாழ்த்தி ஒளிதரும்!”

நிச்சயிக்கப்பட்ட 72 இணையர்களுக்கு - சென்னை கலைவாணர் அரங்கில் திருமணம்!

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தலைமையேற்று நடத்தி வைக்கிறார்!

சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!

சென்னை,மார்ச்.12-

சென்னை கிழக்கு மாவட்ட திமுக துறைமுகம் மேற்கு பகுதி சார்பில் மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு, மனிதநேயம் - 18, இதயம் இணையும் இல்லறம்! உதயம் வாழ்த்தி ஒளிதரும்!! எனும் தலைப்பில் நிச்சயிக்கப்பட்ட 72 இணையர்களுக்கு இன்று 12.03.2025 காலை 9.00 மணியளவில், சென்னை, சேப்பாக்கம், கலைவாணர் அரங்கத்தில் நடைபெறுகிறது.

இத்திருமண விழாவில் பகுதி கழகச் செயலாளர் எஸ்.முரளி தலைமை வகிக்கிறார். எஸ்.இராஜசேகர், இரா.நரேந்திரன், ஜி.எம். தேவன், பி.ஸ்ரீராமுலு, இசட்.ஆசாத், எம்.விஜயகுமார், என்.பி.எம்.சேக் அப்துல்லா, ஆர்.கலைச்செல்வி, எம்.இ.கனி, எல்.சம்பத்குமார், எம். விநாயகம், பி.விஜயகுமார், பிரதீப்குமார், ராஜேஷ் ஜெயின், வெ.பரிவீன் முன்னிலை, பா.தீ.

துறைமுகம் மேற்கு கிழக்கு வட்ட கழக செயலாளர்கள்: மா.ஜெய்சங்கர், பா.கதிரவன், ஆர்.ரவிச்சந்திரன், எல்.சத்தியநாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.ஏ. அஸ்லாம், டி.கதிரவன், எம்.பரத்குமார், கே.கவியரசு ஆ.நா.பார்த்திபன், பா. அண்ணாதுரை, ஜி.ராமமூர்த்தி ஆகியோர் வரவேற்கின்றனர்.

இம்மாபெரும் திருமண விழாவில், நிச்சயிக்கப்பட்ட இணையர்களுக்கு - தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர் கள் திருமணத்தை நடத்தி வைக்கிறார்.

மேலும், இத்திருணவிழாவில் மேயர் பிரியா ராஜன், தயாநிதிமாறன் எம்.பி, டாக்டர்.கலாநிதி வீராசாமி எம்.பி, ப.தாயகம்கவி எம்.எல்.ஏ, ஏ.வெற்றியழகன் எம்.எல்.ஏ, ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, இ.பரந்தாமன் எம்.எல்.ஏ, ப.ரங்கநாதன், கே.எஸ்.ரவிச்சந்திரன், தமிழன்பிரசன்னா, பி.கே.மூர்த்தி, கே.சந்துரு, கே.எஸ்.எம்.நாதன், சி.மகேஷ்குமார், வே.உமாகாந்த், ஆர்.வரதன், எஸ்.மணிமுடி, சங்கரிநாராயணன். மாவட்ட நிர்வாகிகள்: கோ.ஏகப்பன், தேவஜவஹர், புனிதவதி எத்திராசன், பகுதி கழக செயலாளர்கள்: ஐ.சி.எப்.வ.முரளிதான், எ.நாகராசன், எம்.சி, செ. தமிழ்வேந்தன், எம்.சாமிக்கண்ணு, வே.வாசு, கூ.பி.ஜெயின், சொ.வேலு எம்.சி, வி.சுதாகர்,

டி.எஸ்.பி.ராஜகோபால் எம்.சி, எம்.டி.ஆர்.நாகராஜன், சுதா தீனதயாளன், ராஜேஸ்வரி ஸ்ரீதர், வானவில் விஜய், ந.துலுக்கானம், பி.உதயசங்கர், தாமோதரன், எல்.பி.எப். மோகன், பெரோஸ்கான், கா.ராஜ்முகமது, இரா.வீரமணி, ம.அசோக்குமார், ஆர்.எஸ்.சித்திக், துரைக்கண்ணன், டாக்டர்.ஜி.சாந்தகுமாரி, ஜி.வி.நாகவள்ளி, கிருஷ்ணமூர்த்தி, து.ஆயிரம். பகுதி கழக நிர்வாகிகள்: மே.ஜனார்தனன், கே.ஆர்.அபரஞ்சி, ம.முத்துக் குமார், ந.சுந்தரம், எஸ்.சந்தியாகு, செ. தமிழ்வாணன், வி.சந்தானலட்சுமி, சி.ப.ஜெயராமன், பூக்கடை.எஸ்.வெங்கடேசன், எல்.சாந்திலால். ஆகியோர் சிறப்பிக்கின்றனர்.

வட்ட கழக செயலாளர்கள் சேப்பாக்கம்.வே.பா.பிரபாகரன் டி.சதிஷ் குமார், நன்றி கூறுகிறார்கள்.

கழகப் பொருளாளர், டி.ஆர்.பாலு எம்.பி. - அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! எம்.இ.சேகர் தலைமை!

சென்னை கிழக்கில் மனிதநேயம் 20! மாபெரும் புகழரங்கம்!

அமைச்சர் ஆர்.ராஜேந்திரன் – நடிகர்கள் சத்யராஜ் – ராஜேஷ் – கவிஞர் பா.விஜய் சிறப்புரை!

சென்னை, மார்ச் 12 -

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், கழக தலைவர் 72 வது பிறந்தநாள் மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு - அம்பத்தூர் தெற்கு பகுதி சார்பாக, மாபெரும் புகழரங்கம் - அமைச்சர் ஆர்.ராஜேந்திரன், நடிகர் சத்யராஜ், நடிகர் ராஜேஷ், கவிஞர் பா.விஜய் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில் மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு, மனிதநேயம் 20, தமிழ்த்தாயின் மகன் ஆளட்டும்! கலைத்தாயின் புகழ் ஓங்கட்டும்!! எனும் தலைப்பில் அம்பத்தூர் தெற்கு பகுதியில் மாபெரும் புகழரங்கம் நாளை (13.03.2025 வியாழன்) மாலை 6.00 மணியளவில், சென்னை, முகப்பேர் மெயின்ரோடு. சின்னசாமி திருமணமண்டபத்தில் நடைபெறுகிறது.

இப்புகழரங்கத்தில் வட்டக்கழகச் செயலாளர், எம்.இ. சேகர் தலைமை வகிக்கிறார். கழகப் பொருளாளர்- கழக நாடாளுமன்ற குழுத் தலைவர் டி.ஆர்.பாலு எம்.பி, சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளரும், அமைச்சருமான பி.கே.சேகர்பாபு, மேயர் பிரியா ராஜன், ஜோசப்சாமுவேல் எம்.எல்.ஏ, பி.கே.மூர்த்தி எம்.சி, டி.எஸ்.பி.இராஜகோபால் எம்.சி, எம்.டி.ஆர். நாகராஜ், வி.ரமேஷ் (எ) நீல கண்டன் எம்.சி, எல்.பி.எப். மோகன், டாக்டர் ஜி.சாந்தகுமாரி எம்.சி, டாக்டர் ஏ.பி.பூர்ணிமா எம்.சி, ஜி.வி. நாகவள்ளி எம்.சி, வானவில் விஜய், து.ஆயிரம், கு.கிருஷ்ணமூர்த்தி ஜெ.பால முருகன், எம்.இ.எஸ். சந்தீப், ஸ்ரீதர், செந்தில்குமார், எம்.இ.எஸ்.சந்தோஷ், கே.பிரபு முன்னிலை வகிக்கின்றனர்.

மு.ராஜேந்திரன், சி.வி. ஆறுமுகம், திலகம் மணியரசன், ஆசை இராஜா, எம்.பி.கண்ணன், எம்.ஏ.குட்டி, எம்.பி.கணபதி, ஆர்.எஸ். அர்ஜீனன் வி.ஞானசேகர், ஜி.சோமசுந்தரம், ப.முருகேசன், எஸ்.ஆதிமூலம், எம். செந்தில்குமரன் வரவேற்கின்றனர்.

இம்மாபெரும் புகழரங்கத்தில், சுற்றுலாத் துறை அமைச்சர் ஆர். ராஜேந்திரன், நடிகர் சத்யராஜ், நடிகர் ராஜேஷ், கவிஞர் பா.விஜய் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

மேலும், இப்புகழரங்கத்தில் ப.தாயகம்கவி எம்.எல்.ஏ, அ.வெற்றி அழகன், இ.பரந்தாமன், சன். முனியாண்டி, ப.ரங்கநாதன், கே.எஸ்.இரவிச்சந்திரன், கே.சந்துரு, சி.மகேஷ் குமார், சங்கரிநாராயணன், தமிழன்பிரசன்னா, எஸ். மணிமுடி, வே.உமாகாந்த், கே.எஸ்.எம்.நாதன், எம். விஜயகுமார், என்.பி.எம். ஷேக் அப்துல்லா, பரிதி இளம்சுருதி, கோ.ஏகப்பன், தேவஜவகர், ஜி.மகா தேவன், புனிதவதி எத்திராசன் எம்.சி, இசட் ஆசாத், கூ.பி. ஜெயின் எம்.சி, ஸ்ரீராமுலு, சரிதாமகேஷ்குமார் எம்.சி.

பகுதிகழகச் செயலாளர்கள்: வே.வாசு, ஐ.சி.எப்.வ. முரளிதரன், எ.நாகராசன் எம்.சி, சொ.வேலு, வி.சுதாகர், எம்.சாமிகண்ணு, செ. தமிழ்வேந்தன், எஸ்.இராஜசேகர், எஸ்.முரளி. பொதுக் குழு உறுப்பினர்கள்: கோ. மணி, எஸ்.பன்னீர் செல்வம், டி.வி.செம்மொழி எம்.சி, பி.ஜெ.துளசிங்கம், பி. உதயசங்கர், சாவித்திரி வீரராகவன், எம்.இப்ராஹிம் கனி, அ.நிர்மலாதேவி, இரா.கலைச்செல்வி, டி. லோகேஷ், ப.ஜெகதீஷ், க.வினோத், எஸ்.தனசேகர், ஜி.ஜெ.பிரபு, ஆர்.டி.சங்கர் நானா, நா.துலுக்காணம், ஜி.தாமோதரன், துரைகண்ணன், சுதாதீனதயாளன் எம்.சி, ராஜேஸ்வரி ஸ்ரீதர் எம்.சி, பி.விஜயகுமார், எம். பெரோஸ்கான், எம்.விநாயகம், ஆர்.எஸ்.சித்திக், க. பா.பிரதீப்குமார், ம. அசோக்குமார், எல்.சம்பத்குமார், கா.ராஜ்முகமது, இரா.வீரமணி. எஸ்.உமாசந்தானம் எம்.சி, கே.பொற்கொடி எம்.சி, எம்.கமல் எம்.சி. உஷாநாகராஜ் எம்.சி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

வட்ட துணை செயலாளர் என்.பாலசந்தர் நன்றி கூறுகிறார்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு, நேற்று (11.03.2025) வில்லிவாக்கம், சிவசக்தி நகரில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் ரூ.53.50 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் கொளத்தூர் வண்ண மீன்கள் வர்த்தக மையத்தின் முன்னேற்றப் பணிகளை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் போது, மேயர் ஆர்.பிரியா, வெற்றி அழகன் எம்.எல்.ஏ., மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன் உள்ளிட்ட அலுவலர்கள் உடனிருந்தனர்.

திருவைகுண்டத்தில் பட்டியல் இன சமூகத்தைச் சேர்ந்த மாணவன் மீது தாக்குதல்

ஆதி திராவிடர் - பழங்குடியினர் மாநில ஆணையம் விசாரணை!

ஆணையத்தின் தலைவர் நீதியரசர் ச.தமிழ்வாணன் – உறுப்பினர்கள் முனைவர் சு.ஆனந்தராஜா – இளஞ்செழியனைக் கொண்ட அமர்வு நடவடிக்கை!

சென்னை, மார்ச் 12-

திருவைகுண்டத்தில் பட்டியலின சமூகத்தைச் சேர்ந்த மாணவனுக்கு ஏற்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாநில ஆணையம் விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளது.

இது குறித்து இவ் ஆணையத்தின் செய்திக்குறிப்பு வருமாறு:-

11.03.2025 தேதியன்று தினகரன், தினத்தந்தி, தினமலர் மற்றும் சில நாளிதழ்கள் மற்றும் சமூக ஊடகங்கள் ஆகியவற்றில் வெளிவந்த “பட்டியல் வகுப்பைச் சேர்ந்த சுமார் 17 வயதுடைய பிளஸ் 1 படிக்கும் மாணவர் செல்வன். தேவேந்திரன் என்பவர் பேருந்தில் பள்ளிக்குச் சென்று கொண்டிருந்த போது சிலர் அம்மாணவரை சாதி ரீதியாக வன்கொடுமை செய்யும் நோக்கத்துடன், பேருந்திலிருந்து கீழே இழுத்து வந்து அரிவாளால் சரமாரியாக வெட்டி கொடுங்காயங்களை ஏற்படுத்தி, கொலை முயற்சி செய்து இருப்பதாக அறிய முடிகிறது.

தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம் செல்லும் பேருந்தில் பள்ளிக்குச் சென்ற மாணவரை வெட்டி இவ்வாறு கொலை முயற்சியில் ஈடுபட்ட இரட்சுமணன் என்ற நபர் 19 வயதுடையவர் என்றும், மற்ற இரு நபர்களும் சிறுவர்கள் என்றும் கூறப்படுகிறது.

அச்சிறுவர்கள் தன்னிச்சையாக சாதி ரீதியாக வன்கொடுமை கொலை முயற்சியில் ஈடுபட வாய்ப்பு இல்லை. எனவே, அவர்கள் வேறு சில சாதிய வாதிகளின் திட்டமிட்ட தூண்டுதலின் பேரில் இச்செயலில் ஈடுபட்டு இருக்கலாம் எனத் தெரிகிறது.

மேலும், 18 வயதுக்கு கீழள்ள சிறுவர்களுக்கு சட்டப்படி தண்டனை வழங்க முடியாது. அவர்களை சிறார் சீர்திருத்தப் பள்ளிக்கே அனுப்ப முடியும் என்ற காரணத்தால் சாதிய சமூகவிரோதிகள் திட்டமிட்டே மேற்படி சிறுவர்களை ஈடுபடுத்தியிருக்கிறார்கள் என்பதும் வெளிப்படையாகத் தெரிகிறது.

பட்டியல் சமூகத்தைச் சேர்ந்த மாணவனுக்கு ஏற்படுத்தப்பட்ட சாதிய வன்கொடுமை என்பதை கருத்திற்கொண்டு இவ்வாணையம் தாமே முன்வந்து (*Suomato*) இவ்வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டு இவ்வாணையத்தின் தலையர் முனைவர் நீதியரசர் ச.தமிழ்வாணன், உறுப்பினர்கள் முனைவர் சு.ஆனந்தராஜா, இளஞ்செழியன் ஆகியோரைக் கொண்ட முதல் அமர்வு இவ்வாணையைப் பிறப்பிக்கிறது.

இந்த சாதிய வன்கொடுமைச் சம்பவம் தொடர்பாக, தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆகியோர் சட்டப்படி வழக்குப்பதிவு செய்து, விசாரணை மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்க இவ்வாணையம் உத்தரவு பிறப்பிக்கிறது.

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியரும், தூத்துக்குடி காவல் கண்காணிப்பாளரும், இக்கொடிய சம்பவம் குறித்த எடுத்த நடவடிக்கை விவரங்களை தனித்தனி அறிக்கைகளாக 02.04.2025 தேதிக்குள் இவ்வாணையத்திற்கு அனுப்பி வைக்குமாறு மேற்படி மாவட்ட ஆட்சியருக்கும், காவல் கண்காணிப்பாளருக்கும் அறிவிக்கை அனுப்பவும்.

இவ்வாறு ஆணையத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

சி.கே.வி.தமிழ்ச்செல்வன் தலைமை!

காஞ்சிபுரத்தில் - ஒன்றிய பா.ஜ.க.அரசைக் கண்டித்து மாபெரும் பொதுக்கூட்டம்!

க.சுந்தர் எம்.எல்.ஏ.-சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ- குடியாத்தம் பெரியகோடீஸ்வரன் - பி.எம்.ஆனந்த் சிறப்புரை!

காஞ்சிபுரம், மார்ச்.12

காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க சார்பில் தமிழ்நாடு போராடும்; தமிழ்நாடு வெல்லும் ஒன்றிய அரசுக்கு எதிரான கண்டனப் பொதுக்கூட்டம் இன்று (12.3.2025புதன்கிழமை) மாலை 6 மணிக்கு கிருஷ்ணன் தெரு, தென் கோடி, சுப்பிரமணியர் கோயில் அருகில், பிள்ளையார் பாளையம், காஞ்சிபுரத்தில் நடைபெறுகிறது.

கூட்டத்திற்கு மாநகரச் செயலாளர் சி.கே.வி.தமிழ் செல்வன் தலைமை வகிக்கிறார். 4 வது பகுதிச் செயலாளர் சு.வெங்கடேசன் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார். கே.திலகர், எஸ்.சந்துரு, ஆ.சதரதன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக் கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர்க. சுந்தர் எம்.எல்.ஏ., சிறுவேடல் க.செல்வம்எம்.பி., சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. குடியாத்தம் பெரிய கோட்டீஸ்வரன், பி.எம். ஆனந்த் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர். மேயர் எம்.மகாலட்சுமியுவராஜ், சன்பிராண்ட் கே.ஆறு முகம்,

ஜி.சுகுமாரன், தி.அன்பழகன், பெ.சுந்தரவரதன்,வி.எஸ்.ராமகிருஷ்ணன்,எஸ்.கே.பி.சீனிவாசன், எஸ்.சிகாமணி, கே.ஏ.செங்குட்டுவன், ஏ.எஸ்.முத்துசெல்வம், வ. ஜெகன்நாதன், பி.நிர்மலா, கு.சுப்பராயன், அ.யுவராஜ், நாத்திகம் நாகராஜன், கே. ஏ.இளங்கோவன், வ.மலர் மன்னன், ஏ.செல்வி,பி.எஸ். ரமேஷ், டி.வெங்கட்ராமன், டி.ஜெய்கணேஷ், ஜி.சசிகலா கணேஷ், எஸ்.கே.பி. சாந்தி சீனிவாசன், செவிலிமேடு எஸ்.மோகன், எஸ். சுகுமாரன் த.விஸ்வநாதன், எஸ்.மாமல்லன் ப.சுரேஷ்,

பி.சங்கர், ஜெ.வரத ராஜன், எஸ்.சேகர், ஆ.சதீஷ் (எ) சரவணன், எம்.தேவராஜ், சி.எம்.பிரபு, எம். வி. இளம்பரிதி, எஸ். அரவிந்த்குமார், ஜெ.தேவிகா, பி. விஜயா, மல்லிகா ராமகிருஷ்ணன் ஆர்.கே.தம்பிதுரை, எஸ்.துரைமுருகன், ஏ.அர்ஜுன், சாட்சி சண்முகசுந்தரம், டாக்டர்.அன்புச் செல்வன், டாக்டர் எம்.ஒவியக் கண்ணன், உ. ரா.ராஜேந்திரன், பா.சுந்தர், எஸ்.தாஸ், மா.வெங்கடேசன், எஸ்.டில்லிபாபு, இ. ஜாபர், ஏ.சரவணன், டி. ஸ்ரீதர், ஜி.குமரேசன், ரா. வினோத்குமார் ,பி.எஸ். குடியரசு, பா.தனலட்சுமி, எம்.மகாதேவன், ஏ.வரதராஜன், பா.கௌரிசங்கரன், பி.சிவக்குமார், வி.பகவான், எஸ்.எழில்குமார், சீ.ஸ்ரீதர், கோ.எல்லப்பன், வி.கோவிந்தராஜ், கே.சிவக்குமார், ஜெ.நித்யா, வ.ராமமூர்த்தி, ஆர். செந்தில்குமார், ஆர். வேல்முருகன், கத.ரகுக, ஆ.மோகனவேல், ச.விமல் ராஜ், எஸ்.சுமித்ரா, கோ. செல்வம், கே.ராதாகிருஷ்ணன், சி.தங்கபாண்டியன், எம். எஸ். பி. பாண்டியன், ஆ.இப்ராஹிம், ஷெரிப், என்.சங்கர், வ.அய்யாவு கே.கிரி (எ) கிருபாகரன், கே.வடமலை, எ.சரஸ்வதி தேவபிரகாஷ், கே.அருணாசலம், சன்.கனகசபை, சி. சௌந்தர்ராஜன், என்.லட்சுமணன், எம்.எஸ்.பாலன், எஸ். பழனிவேலமற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர். மாவட்டப்பிரதிநிதி அ.பாலமுருகன் நன்றி கூறுகிறார்.

திருக்கோயில்களுக்கு திருப்பணி: மாநில அளவிலான வல்லுநர் குழுவின் 100- வது கூட்டம்!

வல்லுநர் குழு உறுப்பினர்களுக்கு பொன்னாடை அணிவித்து நினைவு பரிசு!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழங்கி சிறப்பித்தார்!

சென்னை, மார்ச்.12-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்பி.கே.சேகர்பாபு நேற்று (11.03.2025) ஆணையர் அலுவலகத்தில் நடைபெற்ற 100வது மாநில அளவிலான வல்லுநர் குழுக் கூட்டத்தில் பங்கேற்று திருக்கோயில்களின் திருப்பணிக்கு உடனுக்குடன் அனுமதி வழங்கிய வல்லுநர் குழு உறுப்பினர்களுக்கு பொன்னாடை அணிவித்து நினைவு பரிசினை வழங்கி சிறப்பு செய்தார்.

இக்கூட்டத்தில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பேசியதாவது,

இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களை தொன்மை மாறாமல் புதுப்பித்து திருப்பணிகள் மேற்கொள்ளும் வகையில் மண்டல அளவிலான வல்லுநர் குழுவும், மாநில அளவிலான வல்லுநர் குழுவும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கடந்த ஆட்சி காலத்தில் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை மாநில அளவிலாள வல்லுநர் குழுக் கூட்டம் நடத்தப்பட்டு வந்த நிலையில் முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்றபின், 16.11.2021 முதல் 15 நாட்களுக்கு ஒருமுறை வல்லுநர் குழுக் கூட்டம் நடத்தப்பட்டு திருக்கோயில்களின் திருப்பணிக்கு உடனுக்குடன் அனுமதி வழங்கப்பட்டு வருகிறது. ஒருங்கிணைந்த திருக்கோயில் மேலாண்மை திட்டத்தின் மூலம் அனைத்து பணிகளும் கணினிமயமாக்கப்பட்டு, மண்டல மற்றும் மாநில வல்லுநர் குழு ஒப்புதல் அளிக்கும் திருப்பணிகளுக்கான ஆணைகளை உடனடியாக சம்பந்தப்பட்ட செயல் அலுவலர்கள் பதிவிறக்கம் செய்திடவும், திருப்பணிகளுக்கான மதிப்பீடுகளை விரைவாக தயார் செய்யும் வகையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இதுவரை நடைபெற்றுள்ள மாநில அளவிலான வல்லுநர் குழுவின் 99 கூட்டங்களில் வழங்கப்பட்ட ஒப்புதலின் அடிப்படையில் ரூ.2,384.24 கோடி மதிப்பீட்டில் 12,960 பணிகள் நடைபெற்று வருகின்றன. இதில் 2,679 திருக்கோயில்களில் திருப்பணிகள் முடிவுற்று குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளது. இது பெருமைக்குரிய சாதனையாகும். இச்சாதனை தொடரும்.

மாநில வல்லுநர் குழுவின் 100வது கூட்டம் நடைபெறும் இந்நாளில் தமிழ்நாடு மட்டுமன்றி, ஒன்றிய அளவில், உலகளவில் துறைக்கு பெருமை சேர்த்து தந்திருக்கும் மாநில வல்லுநர் குழு உறுப்பினர்களான முனைவர் சிவ.ஸ்ரீ. கே. பிச்சை குருக்கள், திரு. கே.சந்திரசேகர பட்டர், திரு.கே.முத்துசாமி, முனைவர் சீ.வசந்தி, திரு.இராமமூர்த்தி, முனைவர் டி.சத்தியமூர்த்தி, முனைவர் கே. தட்சிணாமூர்த்தி, திரு. அனந்த சயன பட்டாச்சாரியார், திரு.கோவிந்தராஜப் பட்டர், திரு.சு.இராஜவேல், திரு.ஆர்.கோவிந்தன், திருமதி சு.ஜானகி ஆகியோருக்கும், இப்பணிகளை ஒருங்கிணைந்து மேற்கொள்ளும் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர், கூடுதல் ஆணையர்கள், தலைமைப் பொறியாளர், இணை ஆணையர்கள் ஆகியோருக்கும் எனது சார்பிலும், துறையின் சார்பிலும், தமிழக அரசின் சார்பிலும் பாராட்டு களையும், நன்றியினையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருக்கோயில்களில் மணியோசையும், தீப, தூப ஆராதனைகளும், தேவார, திருவாசகங்கள் பாடப்பட்டும், மங்களகரமான நாட்களில் கலசங்களில் புனித நீர் விழவேண்டும். அதற்கு உங்களுடைய பணி தொடர வேண்டும் என்று பேசினார்.

இந்நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர்பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர்கள் டாக்டர் சி.பழனி, திருமதி ந.திருமகள், திருமதி சி.ஹரிப்ரியா, திருமதி மா.கவிதா, இணை ஆணையர்கள்பொ. ஜெயராமன், திரு.ச.லட்சுமணன், திருமதி கோ.செ. மங்கையர்க்கரசி, திருமதி இரா.வான்மதி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.